**உடுதும்பர பிரதேச சபை - 2023**
-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடுதும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களில் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, உடுதும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 322,930 இற்கான நிலையான சொத்துக்கள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இருப்புக்கள் கொள்வனவுகள் ரூபா 95,390 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2017 முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் 23 செயற்திட்டங்களின் ரூபா 1,287,242 தொகை கடன்பட்டோர் மீதியை தீர்த்திருந்த போதிலும், தொடர்ந்தும் கடன்பட்டோரின் கீழ் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்ட 82 செயற்திட்டங்களின் பெறுமதியாகிய ரூபா 1,969,797 தொகை கடன் கொடுத்தோரின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2019 ஆண்டில் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 100,000 தொகை கடன்பட்டோர் ஒதுக்கப்பட்ட ஹபுகந்த கிழக்கு அரம்பேவில மற்றும் நுழைவுப் பாதை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் மேலும் கடன்பட்டோர்களை மற்றும் கடன்கொடுத்தோர்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 300,000 இற்கான 03 செயற்திட்டங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் படி நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 3,594,222 தொகை எனினும், சேர்ப்புப் பதிவேட்டின் படி ரூபா 2,186,768 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,407,454 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 12(1)ஏ | 2021 முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையான காலப் பகுதியினுள் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 57 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் நடவடிக்கை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை. | முறைசாரா நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 104(3) மற்றும் 104(4) | 2018 முதல் 2020 காலப் பகுதியில் விபத்துக்கு உள்ளாகியிருந்த 02 வாகனங்களில் ஒரு வாகனத்தின் நி.பி. விசாரணை முடிவடைந்திருந்த போதிலும், பரிந்துரைகள் செயற்படுத்தியிருக்காததுடன், அடுத்த வாகனத்தின் விசாரணைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | நி.பி. விசாரணைகள் மேற்கொண்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 371(இ) | 2018 முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த முற்பணம் ரூபா 60,810 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (iii) நி.பி. 571(3) | 09 சந்தர்ப்பங்கள் தொடர்பாக காலவதியாகியிருந்த பலவின வைப்புக்கள் ரூபா 64,020 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1993 இன் 02 இலக்க மத்திய மாகாண முத்திரைக் கட்டணம் திருப்பும் நியதிச் சட்டம் | 02 வருட காலத்தை மிகைத்துள்ள முத்திரைக் கட்டண வருமானம் வழங்க முடியாதென காட்டப்பட்டிருந்த போதிலும், 2012 முதல் 2018 வரை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,571,880 தொகையினை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட காலத்தினுள் முத்திரைக் கட்டணத்தை தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,255,725 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,960,443 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,960,500 | 1,171,997 | 1,136,564 | 668,017 | 2,937,400 | 1,842,187 | 1,519,550 | 632,584 |
| ii. | வாடகை | 3,066,400 | 3,237,963 | 3,384,795 | 3,157,776 | 3,729,600 | 3,178,932 | 1,145,828 | 3,804,608 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 722,650 | 614,100 | 603,350 | 121,750 | 870,000 | 750,522 | 664,022 | 111,000 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 42,583,400 | 43,351,616 | 40,914,621 | 8,717,629 | 8,044,500 | 44,709,086 | 38,633,715 | 6,275,634 |
| | | 48,332,950 | 48,375,676 | 46,039,330 | 12,665,172 | 15,581,500 | 50,480,727 | 41,963,115 | 10,823,826 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 493,636 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 10,000 ஐ மிகைத்துள்ள 06 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 112,063 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளுக்கு இணங்க வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 2005 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி நிலுவை ரூபா 140,230 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | உரிய தரப்பினரை அறிவுறுத்தப்பட்டது என. | நிலுவை மீதிகளை அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| | பொது வர்த்தக கட்டிடத் தொகுதியில் 14 கடை அறைகளுக்காக 2018 மே 22 திகதி பெற்றிருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை 2019 ஆண்டில் செயற்படுத்திய போது 06 கடைகளிலிருந்து அந்த பெறுமதி மதிப்பீட்டுத் தொகையை செலுத்த மறுத்திருந்ததுடன், 2020 ஆண்டில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டளவில் இந்த கடையறைகள் திறந்த நிலையில் காணப்பட்டதுடன், அந்த 06 கடையறைகள் தொடர்பாக ரூபா 3,051,905 இற்கான நிலுவை கடையறை வாடகை மீதியொன்று காணப்பட்டது. | இடைக்காலத் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது என. | வழக்குத் தீர்மானத்தின் படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 807,922 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,839,780 தொகையாக இருந்தது. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான உடுதும்பர நீர் செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மாதிரி பரிசோதனை அறிக்கைகளின் படி கொலிபோம் (Coliform) பற்றீரியா மிகவும் உயர்ந்த அளவில் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குடிப்பதற்கு பொருத்தமில்லாத அசுத்த நீர் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட பரிசோதனைகள் மேற்கொண்டு சுத்தமான குடிநீர் வினியோகிக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,495,432 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்திற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,219,014 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 241,510 தொகையினை அறவீடு செய்யப்படவில்லை. | எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகளை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,413,275 தொகையாக காணப்படுவதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 01 வருடத்திற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,398,307 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தொகை ரூபா 3,298,644 இற்கான 03 வானங்கள் மற்றும் 02 இயந்திரங்கள் 03 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரை கால வீச்சு முதல் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொண்டு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்துப்பட்டு வந்த வாராந்த சந்தையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொது மக்கள் சேவைகள் பேணப்பட வேண்டியதுடன், வருமானம் சேகரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 8,920,646 இற்கான 22 சனசமூக நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 675,000 இற்கான 11 அம்பலங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை உரித்தாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் படி 2019 முதல் மீளாய்வாண்டு வரை 647 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 393,338,231 தொகை அபிவிருத்தி வேலை தொடர்பாக கவனயீனமாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 9,872,712 தொகை செலவிடப்பட்டு 08 செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோய் காரணமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனது என. | திட்டமிடப்பட்ட அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 09 பதவிகளுக்கான 14 வெற்றிடங்கள் காணப்பட்டது. | ஆட்சேர்க்கப்பட வேண்டிய வெற்றிடப் பதவிகள் நிறுத்தப்பட்டுள்ளது என. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |